

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 98.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரும்பாக்கம், முடிச்சூர், அயனம்பாக்கம், வேளச்சேரி, சீக்கனான் ஏரிக்கரைகளை மேம்படுத்தும் பணிகள் மற்றும் வேளச்சேரி மேம்பாலத்தின் கீழ் பகுதியை அழகுபடுத்தும் பணி, என மொத்தம் 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 3268 குடியிருப்புகள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார் !

## முதல் பக்கத் தொடர்ச்சி

செலவில் 222 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், வெரைட்டிஹால் ரோடு திட்டப்பகுதியில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 24 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் 192 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

தஞ்சாவூர் மாவட்டம், வலையன் வயல் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 19 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் 168 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், டாக்டர் ஜே.ஜே.நகர் பகுதி - 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 12 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் 108 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

**என மொத்தம் 426 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 3,268 குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், தார் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" திட்டத்தின் கீழ் அனைத்து திட்டப்பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

**இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 118 திட்டப் பகுதிகளில் 4,505.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 39,915 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்தி கேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்திட

# செலவினைச் சுருக்கிடுவோம்; சேமிப்பை பெருக்கிடுவோம் !

## 'உலக சிக்கன நாள்' வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, அக்.31-**

**'உலக சிக்கன நாளை'யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார். அதில் "வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்திட, செலவினை சுருக்கிடுவோம்; சேமிப்பை பெருக்கிடுவோம்" என்று வலியுறுத்தியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'உலக சிக்கன நாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பொதுமக்களிடையே சிக்கனத்தின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்துவத்தையும் உணர்த்திடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் 30ஆம் நாள் "உலக சிக்கன நாள்" கொண்டாடப்படுகிறது. மக்கள் தங்கள் வாழ்நாளில் சிக்கனமாகச் செலவு செய்து, வருவாயில் ஒரு பகுதியை சேமிப்பாக்கி, எதிர்காலத்தில் பெரும் பயனடைந்து, வீட்டிற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பதையே இந்த "உலக சிக்கன நாள்" வலியுறுத்துகிறது.

வரவுக்கு மேல் செலவு செய்பவர்கள் வாழ்க்கையில் எத்தகைய இன்னல்களை சந்திக்க நேரிடும் என்பதனை அய்யன் வள்ளுவப் பெருந்தகை



**"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்"**

என்ற குறட்பா மூலம் "ஒருவன் தனது செல்வத்தின் அளவை அறிந்து அதற்கு ஏற்றபடி வாழாவிடில் அவன் வாழ்க்கை, செல்வம் இருப்பது போலத் தோன்றினாலும் செல்வம் இழந்து வாழ்க்கைக் கெடும்" என்று கூறியுள்ளார்.

அந்த வகையில் ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு அஞ்சலகங்கள் மூலம் செயல்படுத்தப்படும் சிறு சேமிப்புத் திட்டங்கள் ஒரு பாதுகாப்பு அரணாக அமைந்துள்ளது. இது சேமிப்பவர்களின் குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், எதிர்பாராச் செலவுகளை எதிர்கொள்வதற்கும் பயன்படுகிறது. தனிமனிதனின் சேமிப்பு அக்குடும்பத்துக்குப் பயன்படுவதோடு மட்டும் அல்லாமல், அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் ஏதுவாகிறது. இதன் மூலம் நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிப் பணிகளில் சிறுசேமிப்புத் திட்டங்களின் பங்களிப்பு சிறப்பான அளவில் அமைகிறது.

"சிறுகக் கட்டி பெருக வாழ்" என்னும் பொன் மொழிக்கேற்ப, பள்ளி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும், விவசாயிகள், தொழிலதிபர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள், முறைசாராத் தொழிலில் ஈடுபடுவோர், சுய தொழில் புரிவோர், மகளிர் ஆகிய அனைவரும் அருகிலுள்ள அஞ்சலகத்தில் சேர்ந்து சேமிப்புக் கணக்கினைத் துவங்கிட இந்த உலக சிக்கன நாளில் கேட்டுக்கொள்கிறேன்.

"செலவினை சுருக்கிடுவோம், சேமிப்பை பெருக்கிடுவோம்" என்னும் உறுதி கொண்டு சிறப்பாக வாழ்ந்திடுவோம் !

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக - சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களுக்கான

# உற்பத்தியாளர்கள் - விநியோகஸ்தர்கள் விவரங்கள் அடங்கிய கோப்பகம் புதுப்பிப்பு!

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அறிவிப்பு!

*சென்னை, அக்.31-*

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் செய்தி வெளியீடு வருமாறு:

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 26 செப்டம்பர் 2022 அன்று தமிழ்நாட்டிலுள்ள ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று பொருட்களுக்கான உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களின் விவரங்கள் அடங்கிய கோப்பகத்தை (*Directory of Manufactures & Distributors of Eco-alternative for Single Use Plastic in Tamil Nadu*) *www.tnpcb.gov.in* என்ற வலைதள முகவரியில் வெளியிட்டுள்ளது. இந்த கோப்பகம் நிறுவன பெயர், முகவரி, தொடர்பு விவரங்கள், உற்பத்தி செய்யப்படும் தயாரிப்பு போன்ற விவரங்களைக் கொண்டுள்ளது.

தற்போது, வாரியம் கோப்பகத்தைப் புதுப்பிக்கத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் சமீபத்திய விவரங்களை வழங்கவும், உற்பத்தியாளர்கள்/விநியோகஸ்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையே ஒரு தொடர்பை உருவாக்குவதன் மூலம் உற்பத்தியாளர்கள்/விநியோகஸ்தர்கள் வியாபாரம் அதிகரிக்கவும் வழிவகுக்கும். மற்றும் குறு/சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். மேலும் இது சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் வழிவகுக்கும். வாரியத்தால் வழங்கப்படும் இந்த வாய்ப்பினை அனைத்து உற்பத்தியாளர்கள் / விநியோகஸ்தர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

எனவே, ஏற்கனவே கோப்பகத்தில் பதிவுசெய்துள்ள அனைத்து உற்பத்தியாளர்கள் / விநியோகஸ்தர்கள் மற்றும் புதிய உற்பத்தியாளர்கள் / விநியோகஸ்தர்கள் 11.11.24-க்கு முன் தயாரிப்பு மாதிரிகளுடன் மேற்காணும் விவரங்களையும் பூர்த்தி செய்து தபால் மூலமும், மற்றும் கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மின்னஞ்சல் முகவரி - *pwmsec@tnpcb.gov.in* முகவரி -தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 76, மவுண்ட் சாலை, கிண்டி, சென்னை - 600 032.

இவ்வாறு அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி- சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில்

# சாலை விபத்து - உயிரிழந்த காவலர் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 31 -

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த காவலரின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அய்யூர் அகரத்தில் கார் மோதி உயிரிழந்த காவலர் சத்தியமூர்த்தி குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்துவந்த சத்தியமூர்த்தி (வயது 27) (PC 1347) என்பவர் கடந்த 26.10.2024 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் அரசியல் கட்சி ஒன்று நடத்திய மாநாட்டின் பாதுகாப்பு பணிக்காக இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அய்யூர், அகரம் மேம்பாலம் அருகில் எதிர்பாராதவிதமாக கார் ஒன்று மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக சென்னை இராஜீவ்காந்தி அரசுப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 29.10.2024 அன்று உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

காவலர் சத்தியமூர்த்தி அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

காவலர் சத்தியமூர்த்தி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

# பெரம்பலூர் மாவட்டத்தில் விழா நடைபெறும் இடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆய்வு!

பெரம்பலூர், அக்.31-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நவம்பர் மாதத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு விழாவில் கலந்துகொள்ள வருகை தர உள்ளதால், நிகழ்ச்சி நடைபெற உள்ள இடம் மற்றும் முன்னேற்பாடு பணிகள் குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நவம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் மூலம் மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளதால் நிகழ்ச்சி நடைபெற தேர்வு செய்யப்பட்டுள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக மைதானத்தில் விழாவிற்கான பந்தல் அமைய உள்ள இடம், பயனாளிகள் மற்றும் பொதுமக்களை அமர வைக்க உள்ள இடம், அவர்களை பாதுகாப்பாக அழைத்து வருவதற்கான வழித்தடங்களையும் போக்குவரத்துத் துறை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

போதிய அளிவில் குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை தேவைகளை ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும், பயனாளிகள் மற்றும் பொதுமக்களை அழைத்துவரும் வாகனங்களை நிறுத்துவதற்கு முறையான இடங்களை தேர்வு செய்திட வேண்டும் என்றும், தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ள திட்டங்கள், திறந்து வைக்கப்படவுள்ள திட்டங்கள், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ள விபரங்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தயார் செய்திட வேண்டும் எனவும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அப்போது, மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல்பிரபு, சார் ஆட்சியர் சுகோகுல்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ச. வைத்தியநாதன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலமுருகன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திருவருள், உதவிப்பொறியாளர் கவிதா, பெரம்பலூர் வட்டாட்சியர் சரவணன் மற்றும் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக நிர்வாகிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

## விடுமுறை அறிவிப்பு

இன்று (31.10.2024 - வியாழக்கிழமை) முரசொலி அலுவலகத்திற்கு விடுமுறை. முரசொலியின் அடுத்த இதழ் நாளை மறுநாள் (02.11.2024 - சனிக்கிழமை) வழக்கம் போல் வெளிவரும்.

**தலைமை நிர்வாகி**
**முரசொலி**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நவம்பர் மாதத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு விழாவில் கலந்துகொள்ள வருகை தர உள்ளதால், நிகழ்ச்சி நடைபெற உள்ள இடம் மற்றும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ், மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் செவ்வாய்ப்பேட்டையில் உள்ள முத்துராமலிங்க தேவர் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளரும், சுற்றுலாதுறை அமைச்சருமான இரா.இராஜேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநகர செயலாளர் பா.ரகுபதி, பகுதி கழக செயலாளர் சி.பிரகாஷ், மாவட்ட துணைச்செயலாளர் மஞ்சுளா, கோட்டச் செயலாளர் ஏ.கண்ணன் உட்பட நிர்வாகிகள் உள்ளனர்.